வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 31.07.2025 வியாழக்கிழமை இதழ் : 212 பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## அரியாலை மனித புதைகுழி:

# குழந்தையுடைய எலும்புக்கூட்டை அணைத்தபடி எலும்புக்கூடு மீட்பு!

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 31

**குழந்தையுடையது என்று கருதப்படும் எலும்புக்கூட்டை அரவணைத்தவாறு பெரிய எலும்புக்கூடு ஒன்று அரியாலை மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்டது. இந்த இரு மனித எலும்புக்கூடுகளும் நேற்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டன என்று சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.**



அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட இரு மனிதப் புதைகுழிகளில் நேற்று புதன்கிழமையும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட அகழ்வில் 24ஆவது நாளில் முன்னெடுக்கப்பட்ட பணிகளின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சட்டத்தரணி,

"பெரிய மனித எலும்புக்கூட்டு தொகுதியுடன் சிறிய (குழந்தை) எலும்புக்கூட்டு தொகுதி அரவணைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. இவை சுத்தப்படுத்தப்பட்டு முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன" - என்று கூறினார்.

இதேநேரம், நேற்றைய தினம் இரு மனிதப் புதைகுழிகளிலிருந்தும் 4 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. 3 மனித எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இதேவேளை, நேற்று வரை இரு மனிதப் புதை குழிகளிலும் 115 மனித

11

## நாவற்குழியில் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம்:

# 22 பேரின் ஆட்கொணர்வு வழக்கின் தீர்ப்பு ஓக.28இல்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 31

நாவற்குழியில் காணாமல் ஆக்கப்பட்ட 22 பேர் தொடர்பான ஆட்கொணர்வு வழக்கில் எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதி தீர்ப்புக்காக திகதியிடப்பட்டுள்ளது.

நாவற்குழியில் கடந்த 1996ஆம் ஆண்டு இராணுவத்தினரின சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 பேர் தொடர்பான ஆட்கொணர்வு வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல்

11

## எல்ஸா கப்பல் நிறுவனம்

# இலங்கைக்கு இழப்பீடு வழங்குவதற்கு இணக்கம்

கொழும்பு, ஜூலை 31

இந்தியாவின் கேரள கடல் பரப்பில் எல்ஸா த்ரீ கப்பல் விபத்துக்கு உள்ளானமையால் இலங்கையின் கடல்சார் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்க அந்தக் கப்பலின் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

லைபீரிய கொடியுடன் பயணித்த எம். எஸ். சி

11

# பாம்பு தீண்டி இளைஞர் உயிரிழப்பு

த.பிரதீபன், பு.கஜிந்தன்

யாழ்., ஜூலை 31

இசை நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

புத்தூர் மேற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வச்சந்திரன் மிரோஜன் (வயது 27) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த இளைஞர், அயலிலுள்ள ஆலயத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியை பார்ப்பதற்காக நேற்று முன்தினம் இரவு

11

# பௌத்தமயமாகும் கந்தரோடை: எதிராக நீதிமன்றை நாடுவோம்!

வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர்

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 31

கந்தரோடையில் பௌத்த மத்திய நிலையம் அமைப்பதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவதற்கு தயாராக உள்ளதாக வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி. பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

வலி. தெற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று புதன் கிழமை அவரின் தலைமையில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு கூறினார்.

11

# சாட்சியம் அளிப்பதற்கு தயார்; யாழ். நீதிமன்றில் முற்பட முடியாது

லலித், குகன் வழக்கில் கோட்டாபய உயர்நீதிமன்றத்துக்கு தெரிவிப்பு!

கொழும்பு, ஜூலை 31

காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் ஆட்கொணர்வு வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு தயார். ஆனால், யாழ்ப்பாணம் நீதிமன்றில் முன்னிலையாக முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது சட்டத்தரணி மூலமாக உயர்நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளார்.

லலித் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆட்கொணர்வு தொடர்பான மேன்முறையீட்டு மனு நேற்று புதன்கிழமை மூன்று நீதியரசர்கள் ஆயம் முன்பாக விசாரணைக்கு

11

# 20 ஆயிரம் மாணவர்கள் 3 வருடங்களில் விலகல்

பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 31

கற்றல் நடவடிக்கைகளிலிருந்து கடந்த மூன்று வருடங்களில் 20 ஆயிரம் மாணவர்கள் இடைவிலகினர் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு யோசனைகள்

11

# பயிரிடப்படாத நிலங்கள் பற்றிய தகவல்களை திரட்ட நடவடிக்கை

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜூலை 31

விவசாய உற்பத்தி மேற்கொள்ளப்படாத நிலங்கள் பற்றிய தகவல்களைத் திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலங்கள் ஏற்றுமதி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் என்று கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த பத்து

11

# இந்தியாவுடன் ஒப்பந்தம் எதிர்த்து வழக்கு தாக்கல்

கொழும்பு, ஜூலை 31

இலங்கையர்களுக்கு டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமானி ரிஷாத் ஹமீத் தாக்கல் செய்த இந்த

11

## சம்பூரில் மனித எலும்பு எச்சம்:

# அகழ்வுப் பணிகள் குறித்து ஓக. 6இல் விசேட கூட்டம்!

திருகோணமலை, ஜூலை 31

சம்பூரில் மனித எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தை அகழ்வு செய்வதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்க விசேட கூட்டத்தை எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி நடத்துவதற்கு மூதூர் நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

11

# போதைப்பொருள் குற்றம் 122,913 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 31

இந்த ஆண்டில் நேற்றுமுன்தினம் வரை போதைப் பொருள் சார்ந்த குற்றங்களுக்காக ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 913 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், 2025 ஜனவரி 1 முதல் நேற்று முன்தினம் வரை 9 இலட்சத்து 28 ஆயிரத்து 787 கிலோ ஹெரோயின், 13 இலட்சத்து 96 ஆயிரத்து 709

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 6 பிரதேச செயலகங்களில் நிரந்தர நிர்வாக அலுவலர் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களில் 9 பிரதேச செயலகங்களில் மட்டும் நிரந்தர நிர்வாக உத்தியோகத்தர்கள் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஏனைய 6 பிரதேச செயலகங்களிலும் நிரந்த உத்தியோகத்தர்கள் இன்றி பதில் கடமை உத்தியோகத்தர்களே கடமையில் உள்ளமை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களான யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி ஆகியவற்றில் கடமையிலுள்ள நிர்வாக உத்தியோகத்தர்கள் அநேகமாக 2021 ஆம் ஆண்டு பொறுப் பேற்றவர்களாக உள்ளனர்.

இந்தநிலையில், கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் நிர்வாக உத்தியோகத்தர் மட்டும் 2011 இருந்து இன்று வரை இடமாற்றம் ஏதும் இன்றி கோப்பாய் பிரதேச செயலகத்தில் 14 வருடங்களாகத் தொடர்ந்து கடமையில் உள்ளார்.

ஏனைய பிரதேச செயலகங்களான வேலனை, நெடுந்தீவு, ஊர்காவற்துறை, காரைநகர், தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் நிர்வாக உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. (அ)



## சகல பிரிவுகளுடனும் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை

### பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கில் யாழ். போதனா வைத்தியசாலை தற்போது சகல பிரிவுகளையும் கொண்டு இயங்குகின்றது. இருப்பினும் வைத்தியசாலையின் மேலும் கட்டட வசதிகளும் உபகரண மற்றும் ஆளணி வசதிகளும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ விடுதிகளுக்காக இரண்டு கட்டில்களும் சில உபகரணங்களும் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து வருகை தந்திருந்த அன்பரினால் வைபரீதியாக கையளிக்கப்பட்டது.

போதனா வைத்தியசாலையில் சில விடுதிகள் அண்மையில் திறக்கப்பட்டதும் மற்றும் இவ்வாறு புதிய உபகரணங்கள் வழங்கப்படுவதும் வைத்திய சேவையை மேலும் வலுப்படுத்துகின்றது-என்றார். (அ-05)

## மன்னார் மேலதிக அரச அதிபர்கள் இருவரும் கடமைகளை ஏற்றனர்!



மன்னார், ஜூலை 31

மன்னார் மாவட்டத்துக்கு நிர்வாகம் மற்றும் காணி விவகாரங்களுக்குப் பொறுப்பாக மேலதிக அரசாங்க அதிபர்கள் இருவர் பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மேலதிக அரசாங்க அதிபர்கள் இருவரும் நேற்று புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.

மன்னார் பிரதேச செயலாளராக கடமையாற்றிய மனோகரன் பிரதீப், மன்னார் மாவட்ட நிர்வாக விவகாரங்களுக்கான மேலதிக அரசாங்க அதிபராக கடமைகளை பொறுப்பேற்றார்.

அத்துடன் மடு பிரதேச செயலாளராக கடமையாற்றிய கீ. பீட் நிஜாகரன், மன்னார் மாவட்ட காணி விவகாரங்களுக்கான மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள் இருவரும் நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு சென்று மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர். இதன்போது மேலதிக அரசாங்க அதிபர்கள் இருவரையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மாலை அணிவித்து வரவேற்றார்.

மேலும் இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார், மடு பிரதேச செயலக பணியாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

## கோப்பாயில் கோர விபத்து!

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் - பருத்துறை வீதியில் கார் ஒன்றும் பேருந்து ஒன்றும் மோதியதில் கோர விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

பருத்தித்துறை வீதி வழியாக பயணிகளுடன் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் அவ்வழியே வந்த சிறிய ரக கார் ஒன்றும் மோதி விபத்திற்குள்ளாகின.

விபத்துக்குள்ளான பேருந்து வேகக்கட்டுப் பாட்டை இழந்ததில் குறித்த வீதியிலிருந்த கடையொன்றுக்குள் புகுந்துள்ளது.

விபத்திற்குள்ளான இரு வாகனங்களும் சேதமடைந் துள்ளன. காரின் முன்புறம் பலத்த சேதமடைந்துள்ளது. விபத்தில் பேருந்து சாரதிக் கும் கார் சாரதிக்கும் காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

## மணல் அகழ்வால் அழியும் ஆபத்தில் அம்பன் கிராமம்

### பருத்தித்துறை பிரதேச செயலர் யுகதீஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 31

மணல் அகழ்வால் அம்பன் பிரதேசம் அழிந்துசெல்லும் அபாயத்தில் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் நல்லூருக்கு மணல் வழங்க முடியாது என்று பருத்தித்துறை பிரதேச செயலர் உதயகுமார் யுகதீஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் தனது அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கொட்டோடை பகுதியில் கடந்த காலங்களில் முறையற்ற மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டமையால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் நல்லூர் ஆலயத்துக்குக் கூட இனிமேல் மணல் விநியோகிக்கமுடியாது. நாம் நல்லூர் ஆலயத்துக்கு மணல் மண் வழங்குவதற்கு எதிரானவர்கள் அல்லர்.

கொட்டோடை கிராமத்துக்கு கடந்த கால முறையற்ற மணல் அகழ்வினால் ஏற்படுத்தப்பட்ட பாரிய சூழல் பாதிப்பு காரணமாகவே மக்கள் நல்லூரான் ஆலயத்துக்கு மணல் மண் வழங்க மறுத்தனர் - என்றார். (அ-5)

## கிளிநொச்சி செயலகத்தில் சிறுவர் பூங்கா திறந்துவைப்பு!

கிளிநொச்சி, ஜூலை 31

கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்துக்கு பெற்றோர்களோடு வருகை தரும் சிறுவர், சிறுமிகளின் நன்மை கருதி குறித்த சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் வேள்ட் விசன் நிறுவனத்தின் பங்களிப்புடன் இந்த சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா சிறுவர்களை மகிழ்வூட்டவும் சிந்திக்கவும், அவர்களது உடல், மன அசதியைப் போக்க ஊஞ்சல், சறுக்கல்கள், இராட்டினம், சாய் பலகை, சிறு விளையாட்டு இல்லம் போன்றன பெரிதும் மகிழ்ச்சியூட்டுகின்றன.

மாவட்ட செயலக சிறுவர் பெண்கள் பிரிவுக்கு வருகை தருபவர்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தும் இடமும் அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வேள்ட் விசன் நிறுவனத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச திட்ட முகாமையாளர் மக்டலின் குயின்டஸ் ஆகியோர் கலந்து கொண்டு பூங்காவை திறந்து வைத்தனர். (அ)

## ஏ-9 வீதி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 31

யாழ்ப்பாணம் - கண்டி (ஏ-9) நெடுஞ்சாலையில் மதவாச்சி - வெலிஓயா சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி மற்றொரு லொறி, மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த மதவாச்சியை சேர்ந்த 58 வயது நபரே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

### திருத்தம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 30.07.2025 திகதிய ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட Invitation Bid 2025/10 என்னும் கேள்வி அறிவித்தலில் Package 2 இல் குறிப்பிட்ட வேலை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) |
|---|---|---|
| NP/14/41(13)/4/ Council/05/2025/27 | Package 02<br>* Reconstruction of Box Culvert and Retaining wall in Madihe Panchasiha Vidyalaya Backside (Sarasvathy veethy – Puttur East.<br>* Reconstruction of Box Culvert at Ulavikkulam Pillaiyaar Kovil Veethy - Atchuveli.<br>* Construction of Box Culvert at College of education Back side road - Kopay | 4.90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.07.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உள்ளக - வெளியக விசாரணை பிரச்னை

யுத்தம் முடிந்து பதினாறு வருடங்களுக்குப் பின்னரும்கூட தமிழ் கட்சிகள் தங்களுக்குள் விசாரணையை வைத்து முட்டுப்படுவதை இன்னும் கைவிடவில்லை. இந்த விடயத்தில் அதிகம் தங்களைச் சரியானவர்கள் என்று நிரூபிப்பதற்காக முயற்சிக்கும் கட்சியென்றால் அது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மட்டும்தான். ஒப்பீட்டடிப்படையில் தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் இந்த விடயத்தில் அதிகம் தங்களுக்குள் மோதிக் கொள்வதில்லை.

உண்மையில், விசாரணைக் கோரிக்கையை முன்வைத்து கட்சிகளுக்குள் மோதிக் கொள்வதானது அடிப்படையில் ஓர் அரசியல் அறியாமையாகும். ஏனெனில், நீங்கள் என்னதான் உங்களுக்குள் சரியானவர்களாக இருப்பதற்கு சண்டையிட்டாலும்கூட சர்வதேச அரங்கைப் பொறுத்தவரையில் நீங்கள் அனைவருமே அவர்களுக்கு ஒன்றுதான். அவர்கள் கட்சிகளின் அறிக்கையின் தரம் பற்றி ஆராயப் போவதில்லை. ஏனெனில், அவர்களின் இலங்கை தொடர்பான முடிவுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருப்பவை.

மனித உரிமைகள் பேரவையைப் பொறுத்தவரையில் ஆணையாளர் அறிக்கையை தயார் செய்தாலும்கூட அந்த அறிக்கை உறுப்பு நாடுகளால் தணிக்கை செய்யப்படும். உறுப்பு நாடுகள் மனித உரிமைகளின் அடிப்படையில் இணக்கம் காண்பதில்லை. தங்களுடைய நாடுகளின் நலனின் அடிப்படையில்தான் தீர்மானங்களை எடுக்கும். குறிப்பாக, பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் பலமான நாடுகள் ஒவ்வொன்றும் அவரவர் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகும் நாடுகளை அணி சேர்க்கும் வல்லமை கொண்டவை. இந்த அடிப்படையில்தான் இதுவரையில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் ஆதரவையும் எதிர்ப்பையும் பெற்றிருக்கின்றன. மேற்குலக நாடுகளின் தலையீட்டில்தான் இது வரையில் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். அவ்வாறாயின், பாதிக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தரப்புகள் தங்களின் நியாயங்களை முன்வைக்கத் தேவையில்லையா? - நிச்சயமாக வைக்கத்தான் வேண்டும். அளவுக்கதிகமான நம்பிக்கை இல்லாமல் - அதுதான் கதியென்று இருக்காமல் இந்த விடயங்களை அணுக வேண்டும். ஏனெனில், கடந்த பதினாறு வருடங்களாக ஜெனிவாவில் முகாமிட்டவர்களால் ஒரு சிறு விடயத்தையும் நகர்த்த முடியவில்லை என்னும் போது தொடர்ந்தும் பொய்களைக் கூறிக்கொண்டிருப்பது சரியானதல்ல.

என்னதான் விடயங்களை வெளியில் பேசினாலும் ஒருவேளை மனித உரிமைகள் பேரவையிலிருந்து சிறப்பான அறிக்கை வெளிவந்தாலும்கூட அரசாங்கத்தின் துணையின்றி எந்தவொரு விடயத்தையும் இலங்கைக்குள் முன்னெடுக்க முடியாது. இதன் காரணமாகத்தான் அரசாங்கத்துடன் இணைந்துதான் பிரச்னைக்கான தீர்வைக் காண வேண்டியிருக்கிறது என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் கூறிச் சென்றிருக்கிறார். ஏனெனில், தற்போது உலகம் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கைமீது பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் எந்தவொரு பலமான நாட்டுக்கும் இல்லை. இந்த விடயத்தில் அமெரிக்காதான் விடயங்களை நகர்த்தும் வல்லமை கொண்டது. ஆனால், அமெரிக்காவின் தற்போதைய அணுகுமுறை முற்றிலும் வித்தியாசமானது.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அநுர அரசில் நீதி கிடைக்கும்!

## காணாமல் ஆக்கப்பட்ட லலித்தின் தந்தை

கொழும்பு, ஜூலை 31

"லலித் யார் என்பது தற்போதை அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர் களுக்கு அநுர அரசாங்கத்தில் நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்", என்று காணாமல் ஆக்கப்பட்ட லலித்தின் தந்தை ஆ. வீரராஜா தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி. கட்சியின் முன்னாள் செயல்பாட்டாளரான லலித் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் மீண்டும் முறைப்பாடு ஒன்றை அளித்த பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எனது மகன் காணாமல்போய் 14 வருடங்களாகின்றன. முறைப்பாடொன்றை செய்வதற்காக சி. ஐ. டி. பணிமனைக்கு சென்றோம். அதிலாவது நல்லது கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இது தொடர்பான வழக்கில் நல்ல முடிவு கிடைக்கும் என்றே எதிர்பார்க்கிறோம்.

லலித் மற்றும் குகன் மாத்திரமல்ல ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பத்தவர்கள் பரிதவிக்கின்றனர். அவர்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும், எங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# பிரச்னைகளுக்கு தீர்வு உயிரை மாய்ப்பதல்ல

## மனநல மருத்துவ நிபுணர் அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 31

தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன என்று மனநல மருத்துவ நிபுணர் விந்தியா விஜயபண்டார தெரிவித்துள்ளார்.

"நாட்டில் உயிரை மாய்த்துக்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வாழ்க்கையில் இடம்பெறும் பிரச்னைகளுக்கான ஒரே தீர்வு உயிரை மாய்த்துக்கொள்வது அல்ல. எனவே, உயிரை மாய்த்துக் கொள்ள நினைப்பவர்கள் உடனடியாக மனநல மருத்துவர்களை நாடுவது அவசியமாகும்.

மன ரீதியாக பாதிக்கப்பட்டு உயிரை மாய்த்துக் கொள்ள முயலும் நபர்கள் தேசிய மனநல சுகாதார நிறுவனத்தின் 1926 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ)

## தெய்வீக கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஐயனார் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் , இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறீல சிறீ ஆறுமுக நாவலர் கற்கைநெறி புராணபடன மாணவர்களான ஈ. நவிஷா, திருமதி சோ. நிரஞ்சனா ஆகியோரின் புராண படனமும் நடைபெறவுள்ளது. (ஐ)

# பயணச்சீட்டு பெறாத 40 பேர் சிக்கினார்கள்

## 91,200 ரூபாய் அபராதம் விதிப்பு

கொழும்பு, ஜூலை 31

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மூன்று மணி நேரம் நடைபெற்ற பயணச்சீட்டு (ரிக்கெற்) பரிசோதனையின் போது, பயணச்சீட்டு இல்லாமல் பயணித்த 40 பயணிகள் கைது செய்யப்பட்டனர் என்று புகையிரத பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பயணிகளில் 23 பெண்கள் இருந்தனர். சோதனையை பார்த்த சில பயணிகள் ரயிலில் இருந்து இறங்கி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், கைது செய்யப்பட்ட 30 பயணிகளிடமிருந்து உடனடியாக 91 ஆயிரத்து 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்த பணம் இல்லாதவர்கள் தங்கள் வைப்பு தொகையை விட்டுச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சூட்சுமங்களை உணர்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உயர்வு பெறும் நாள்.

**கடகம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச் சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கணுக்கால் வலிக்கும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே.

**விருச்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உங்கள் கை ஓங்கும்.

**தனுசு**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**மீனம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். மேலதிகாரி உங்களை நம்பி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

### வடக்கு ஆளுநருடனான சந்திப்பில்

# மாகாண சபை பலவீனப்படுத்தப்பட்டது குறித்து சுவிஸ் தூதுவருக்கு விளக்கம்!



*யாழ்ப்பாணம், ஜூலை 31*

கடந்த காலங்களில் மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தம்மை சந்தித்த சுவிற்சர்லாந்து தூதுவர் தலைமையிலான குழுவினருக்கு வடக்கு ஆளுநர் தெரியப்படுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் சிறிவோல்ட்டுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது, வடக்கு மாகாணத்திலுள்ள சில கிராமங்கள் இன்னமும் பின்தங்கியுள்ள நிலையிலேயே உள்ளன. வீதிக் கட்டமைப்புகள்கூட இல்லை. வடக்கு மாகாணத்தில் போரின் பின்னர் தொழிற்சாலைகள் போதுமானதாக இல்லாமையால் வேலை வாய்ப்பு சவாலாக உள்ளது.

அத்துடன், விவசாயம் மற்றும் மீன்பிடி என்பனவற்றுக்கான வளம் சிறப்பாக உள்ளபோதும், மூலப்பொருட்களாகவே இங்கிருந்து அவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு பெறுமதி சேர் உற்பத்திகளாக மாற்றக்கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதன் ஊடாக இங்குள்ள உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள் - என்று வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்தான விமான சேவைகள் தொடர்பிலும் தூதுவர் கேட்டறிந்தார். கொழும்பு - யாழ்ப்பாணம் இடையேயான போக்குவரத்துக்கான நேரத்தை குறைக்கும் நோக்குடன், கட்டுநாயக்காகா - பலாலி இடையேயான இணைப்பு விமான சேவைக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளமையை தெரியப்படுத்திய ஆளுநர், உலக வங்கியைக்கூட இந்த மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்த ஜனாதிபதி பணித்துள்ளமையையும் குறிப்பிட்டார். ஆனாலும், கொழும்பு மைய சில திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதில் சவால்களை எதிர்கொள்வதையும் சுட்டிக்காட்டினார். மேலும், கடந்த காலங்களைவிட வடக்கு மாகாணத்துக்கு மூன்று மடங்கு நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளமையையும் ஆளுநர் தெரியப்படுத்தினார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், அரியாலை மனிதப் புதைகுழி விவகாரம், தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம், மீள்குடியமர்வு செயல்பாடு, சிவில் நிர்வாகத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் தூதுக்குழுவினர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டனர். மேலும், மாகாண சபைகள் தேர்தல், மாகாண சபை முறைமை தொடர்பாகவும் ஆளுநரிடம், தூதுக்குழுவினரால் கேள்வி எழுப்பப்பட்டது. கடந்த காலங்களில் மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று...!

*யாழ்ப்பாணம், ஜூலை 31*

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், குழு இசையில் பாட்டு - கீதவாகினி இசைக் கல்லூரி மாணவர்கள், புல்லாங்குழல் - செல்வி கனிகா பிரதீபன், மிருதங்கம் - கனகசபை சிவகுமார், தபேலா - கந்தசாமி டக்ஷயன் என்பன செல்வி பகீரதி சுப்ரமணியக்குருக்களின் நெறியாள்கையில் நடைபெறும்.

தொடர்ந்து, குழலிசை நிகழ்ச்சி நடைபெறும். இதில், புல்லாங் குழல் பத்மநாதன் பத்மராஜ், வயலின் திருமதி வனஜா ஈஸ்வர சர்மா, மிருதங்கம் நித்தியானந்தன் மதிரூபன், தபேலா கணேஸ்வரன் அகலிகன், முகர்சிங் கந்தசாமி நந்தகுமார் ஆகியோர் வழங்குவர். (ஐ)

* * *

*யாழ்ப்பாணம், ஜூலை 31*

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெய்வீக கூட்டத் தொடரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தி வருகிறது.

இன்றைய தின நிகழ்வுக்கு வேதாந்த மடம், சிறீ சிவகுரு நாத பீட 8ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியர் சிவசிறீ தியாக. மயூரகிரி குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

இதில், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் பிரதம அதிதியாகவும் இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் கி. கந்தவேள் சிறப்பு அதிதியாகவும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா, ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், எஸ். தேவமனோகரன், ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் சித்தாந்த பண்டிதர் சு. கணேசலிங்கம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பங்கேற்கவுள்ளனர்.

கலை நிகழ்வுகளை இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை, ஏழாலை இந்து மாதர் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

சிறப்புக் கலை நிகழ்வாக திருமதி. லஜந்தா குணாவின் நெறியாள்கையில் லஜ நாட்டிய நடனப்பள்ளி மாணவர்கள் வழங்கும் பக்தி பரதம் நடன நிகழ்வு நடைபெறும். (ஐ)

# பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

*வடமராட்சி, ஜூலை 31*

வடமராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கோட்டக் கல்வி பணிமனையில் நடைபெற்றது.

இதில் தலைவராக செ. சிறீவாசன், செயலாளராக ஆ. சிவநாதன், பொருளாளராக சு. சிவகுமார், உப தலைவர்களாக க. யோகேஸ்வரன், எ.கா. அரியகுமார் ஆகியோரும் உப செயலாளராக க. கதிரமலை, நிர்வாக சபை உறுப்பினர்களாக சி. இன்பரூபன், கோ. சற்குணபாலன், வே. சிவசிதம்பரம், சி. குணராசா, வை. திருஷ்ணதாஸ், ந. கணேசமூர்த்தி ஆகியோரும் தெரிவாகினர். (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேகாலை சிறையின் சிறப்பு அறையில் முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த

கொழும்பு, ஜூலை 31

பொல்கஹவெல நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி ஓய்வுபெற்ற அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, கேகாலை சிறைச்சாலையில் உள்ள ஒரு சிறப்பு அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் சுமார் 15 கைதிகள் அந்த அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் கடற்படைத் தளபதியின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவரை இந்த அறைக்கு மாற்ற சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடற்படை புலனாய்வு இயக்குநராக இருந்த காலத்தில் பொத்துஹெர பகுதியில் நடந்த ஒரு கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவ விசாரணை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினரால் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (அ)

# இந்தியாவிலிருந்து இலங்கை வருகை தரும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 31

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இந்த மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் இந்தியாவிலிருந்து 32,925 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதேநேரம், இந்த மாதத்தின் முதல் 27 நாட்களில் மாத்திரம் மொத்தமாக, 173,909 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,341,953 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவைத் தவிர, பிரித்தானியா, நெதர்லாந்து, சீனா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளிலிருந்து அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# பிரகீத் எக்னெலிகொட வழக்கை வருட இறுதிக்குள் முடிவுறுத்துக!

## சந்தியா எக்னெலிகொட வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 31

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தி, இவ்வாண்டு இறுதிக்குள் முடிவுறுத்தும்படி இலங்கையிடம் வலியுறுத்துமாறு வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவிடம் பிரகீத்தின் மனைவி சந்தியா எக்னெலிகொட வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் 29 ஆவது கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின்போது சகல நபர்களையும் வலிந்து காணா மலாக்கப்படல்களிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனத்தின் கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது பற்றி அக்குழுவினால் மீளாய்வு செய்யப்படும்.

இந்நிலையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, பிரகீத் காணாமலாக்கப்பட்ட விவகாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நீதிமன்ற வழக்கு விசாரணை என்பன பற்றிய முழுமையான விவரங்களை அக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

நீதிக்கான தனது போராட்டத்தைத் தமக்கான அச்சுறுத்தலாகக் கருதிய சிலர் நீதிமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் தன்னை அச்சுறுத்தியதாக வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள ஆவணங்களில் சுட்டிக்காட்டியுள்ள சந்தியா எக்னெலிகொட, தான் எத்தனை சவால்களைக் கடந்திருந்தாலும், எதிர்வருங்காலங்களில் இன்னமும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறுகோரி தான் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்ட தரப்பு என்ற ரீதியில் சமூகத்தின் மத்தியிலும், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு கோரியதை தமக்கு அச்சுறுத்தலாகக் கருதிய தரப்பினராலும் தான் முகங்கொடுக்க நேர்ந்த ஒடுக்குமுறைகள் மற்றும் கண்காணிப்புக்கள் குறித்தும் சந்தியா எக்னெலிகொட அதில் விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பிரகீத் எக்னெலிகொட வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தி, இவ்வாண்டு இறுதிக்குள் முடிவுறுத்தும்படி இலங்கையிடம் வலியுறுத்துமாறு அக்குழுவிடம் சந்தியா எக்னெலிகொட வேண்டுகோள்விடுத்துள்ளார். (அ)

# பறவைகள் பூங்காவின் உரிமையாளருக்கு பிணை

கொழும்பு, ஜூலை 31

நாட்டுக்குள் சட்டவிரோதமாக சொகுசு மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அம்பாந்தோட்டை பறவைகள் பூங்காவின் உரிமையாளரை பிணையில் விடுதலை செய்யுமாறு அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை காலை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை பறவைகள் பூங்காவின் உரிமையாளர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, அம்பாந்தோட்டை பறவைகள் பூங்காவின் உரிமையாளரை 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாட்டுக்குள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 200 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியான 21 மோட்டார் சைக்கிள்கள் அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் வைத்து ஜூலை 12 ஆம் திகதி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.(அ)

# ஜெயவர்த்தனபுர மருத்துவமனைக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு, ஜூலை 31

சிறி ஜெயவர்த்தனபுர மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக வைத்தியர் தமர களுபோவில நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கினார்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் உயர்கல்வியை நிறைவு செய்த தமர களுபோவில, 1986 ஆம் ஆண்டு கொழும்பு மருத்துவ பீடத்தில் கல்வி கற்றார்.

பின்னர், பாணந்துறை மருத்துவமனையில் மருத் துவராக தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.(அ)

# சுற்றுலா பயணிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

கொழும்பு, ஜூலை 31

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தற்போது தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற முடியும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனை தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ. வூட்லர், சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தை கொண்டுள்ள சுற்றுலாப் பயணிகள், தங்கள் நாட்டின் சாரதி அனுமதிப்பத்திரத்துடன், இலங்கையில் வாகனம் செலுத்த அனுமதிக்கப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் நாட்டின் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் மட்டுமே இலங்கைக்கு வருபவர்கள் இலங்கையில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற அனுமதிக்கப்படுவார்கள் என அவர் கூறினார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வேரஹெரவில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத் தில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற முடியும்.

இதற்காக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்களது நாட்டின் சாரதி அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

இருப்பினும், தேவையான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் இலங்கையில் வாகனங்களைச் செலுத்துவதை தவிர்க்குமாறு சுற்றுலாப் பயணிகளை பொலிஸ் பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

இதனிடையே, இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வந்தவுடன் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு ஏற்றவகையில், நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் வசதிகளை அறிமுகப்படுத்தும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ. வூட்லர் தெரிவித்துள்ளார். (அ)

# போதைப்பொருள் வழக்கில் தவறாக தடுத்து வைக்கப்பட்டவர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜூலை 31

போதைப்பொருள் குற்ற வழக்கில் தவறாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் மன அழுத்தம் காரணமாக உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

போதைப்பொருள் வழக்கில் தவறாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர், நேற்று முன் தினம் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டபோதும் அவர் உயிருடன் இல்லை என கல்கிஸை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் கீர்த்தி பெர்னாண்டோ தெரிவித்தார்.

தெஹிவளை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட 6 வழக்குகளில் போதைப்பொருள் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லாததால், கல்கிஸை நீதவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் சந்தேக நபர்களை விடுவித்ததாக அவர் கூறினார்.

தவறான தடுப்புக்காவலில் இருந்து மன அழுத்தம் காரணமாக உயிரை மாய்த்துக் கொண்ட சந்தேக நபரும், போதைப் பொருள் தொடர்பான வழக்குகளிலிருந்து விடுவிக்கப் பட்டவர்களில் ஒருவர் என்பதை அவர் மேலும் வெளிப்படுத்தினார்.

இந்த நபர், மே 2024 இல் கைது செய்யப்பட்டு பின்னர் 3200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்ததற்காகத் தடுத்து வைக்கப்பட்டார்.

இது பிணையில் வர முடியாத குற்றமென்பதால் அவர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு மேல் நீதிமன்றத்தால் அவருக்குப் பிணை வழங்கப் பட்டது.

இருப்பினும் அவர் 2 மாதங்களுக்குப் பின், மன அழுத்தம் காரணமாக உயிரை மாய்த்துக் கொண்டதாக கீர்த்தி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இது போன்ற தவறான கைதுகள் மற்றும் தடுப்பு காவல்களால், தொழில் இழப்பு, திருமண உறவு முறிவடைதல் மற்றும் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாத நிலை போன்ற பிரச்னைகள், அப்பாவி நபர்களுக்கு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து சட்டமூல வரைவு அமைச்சரவைக்கு

கொழும்பு, ஜூலை 31

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ரத்து செய்வதற்கான சட்டமூல வரைவு அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டவரைஞர்களால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூல வரைவு பரிசீலனைக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப் பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சிறுவர்களிடம் விற்றமின் டி குறைபாடு!

### சுகாதாரத்துறை எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

**சூரிய ஒளி இல்லாததால் சிறுவர்களிடையே விற்றமின் டி குறைபாடு, ஒரு கடுமையான உடல்நலப் பிரச்னையாக மாறியுள்ளதாக சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.**



மேலும் இது, 20 - 30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பிரச்னையாக இல்லை என்று குழந்தை நல மருத்துவ ஆலோசகர் வைத்தியர் தீபால் பெரேரா கூறியுள்ளார்.

தற்போதுள்ள சிறுவர்கள் வெளியே சென்று வெயிலில் விளையாடுவதற்குப் பதிலாக, தங்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குப் படிப்பது, தனியார் வகுப்புக்களுக்குச் செல்வது, இணைய விளையாட்டுக்களை விளையாடுவது, தொலைக்காட்சி பார்ப்பது மற்றும் அதிகமாக தொலைபேசிகளைப் பயன்படுத்துவது போன்றவற்றில் மிகவும் மும்முரமாக உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த செயற்பாடுகளுக்கு மாறாக, சிறுவர்கள் வெளியே சென்று விளையாட அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் அதிக வெப்பம் காரணமாக வெளியே செல்வது கடினம்.

அதேபோல், ஐரோப்பிய நாடுகளில் நிலவும் குளிரான காலநிலையால் அங்குள்ள சிறுவர்களிடையே விற்றமின் டி குறைபாடு காணப்படுகின்றது.

ஆனால், இலங்கையில் இயற்கையாகவே சூரிய ஒளியிலிருந்து விற்றமின் டி யினைப் பெற முடிந்தாலும், சிறுவர்களிடையே அதிகமாக விற்றமின் டி குறைபாடு காணப்படுகின்றது.

மேலும், அடுத்த தலைமுறைக்குச் சூரிய ஒளி வெளிப்பாடு மிகவும் முக்கியமானதொன்று எனவும், சூரிய ஒளி வெளிப்பாட்டிற்குச் சிறந்த நேரம் காலை 9 மணி முதல் 11 மணி வரை என்றும் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

அத்துடன், நெத்தலி, முட்டையின் மஞ்சள் கரு மற்றும் முருங்கை இலைகள் போன்ற விற்றமின் டி நிறைந்த உணவுகளை உண்பதற்கும் அவர் பரிந்துரைத்துள்ளார். (அ)

# புதிய கல்வி சீரமைப்பு யோசனைகள் முன்வைக்க கால அவகாசம் உண்டு!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க இன்னும் கால அவகாசம் உள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு இதனை தெரிவித்த அவர், இது ஒரு தற்காலிக திட்டம் அல்லவெனவும், மாறாக ஒரு நீண்ட கால திட்டம் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிய தொழில்நுட்ப உலகத்துடன் இணைந்து சுய ஆய்வு மூலம் அறிவைப் பெறும் பொறுப்புள்ள குடிமகனை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

புதிய கல்வி முறையின் கீழ், பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அமைப்பு, நடைமுறை உண்மை புரிதல் மற்றும் பாடங்களின் தெரிவு, சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்தின் தனிப்பட்ட மதிப்பீடு, தொழில்சார் பாடங்கள் என்பன தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்படும்.

புதிய கல்வி முறைமையை முதலில் 2026 ஆம் ஆண்டில், 1 ஆம் தரம் மற்றும் 6 தரத்துக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இன்றைய சிறுவர்கள் தொழில்நுட்ப ரீதியாக முன்னேறியவர்கள். ஆசிரியர்கள் இதை அங்கீகரித்து சுய கற்றலுக்கு உகந்த சூழலை வழங்க வேண்டும்.

தெரிவு அடிப்படையிலான கற்றல் மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதும் அறிவை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

எனவே, இந்த மறுசீரமைப்பு முழுமையாக முடிக்கப்பட்ட அமைப்பு அல்ல என்றும், யோசனைகள், விவாதங்கள் மற்றும் நடைமுறை சிக்கல்களைக் கருத்தில் கொண்டு படிப்படியாக செயல்படுத்தப்படும்-என்றார். (அ)

# கொரியாவில் இலங்கையர்களுக்கு அதிகமான தொழில் வாய்ப்புக்கள்

கொழும்பு, ஜூலை 31

அரசாங்கம் இலங்கை தொழிலாளர் சமூகத்துக்கு அதிகப்படியான சம்பளம் மற்றும் ஆரோக்கியமான தொழிலை பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொண்டுவரும் வேலைத் திட்டத்துக்கு இணக்கம் தெரிவித்து தென்கொரியாவில் அதிகமான தொழில் வாய்ப்புக்கள் தற்போது கிடைத்து வருகின்றன.

அதன்பிரகாரம் அந்த நாட்டின் பருவகால தொழில் குழுவின் கீழான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு கொரியாவின் பொசொங் உள்ளூராட்சி நிறுவனத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதுடன் அது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித் துள்ளது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தினால் அது தொடர்பான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இலங்கை தொழிலாளர்களுக்கு பருவகால தொழில் திட்டத்தின் கீழ், அதிகபட்ச 8 மாதங்கள் வரை பொசொங் மாகாணத்தில் விவசாய கிராமங்களில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

கொரிய அரசாங்கத்தின் ஈ 8 விஸா குழுவின் கீழ் இலங்கை தொழிலாளர்களை பணியமர்த்துவதை இலகுபடுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டமாக செயற்படுத்துவதற்கும் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடுவதற்காக அமைச்சர் விஜித ஹேரத்தினால் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி மற்றும் இந்த மாதம் 1ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னர் தென்கொரியாவில் யொன்க்வோல் மாகாணத்துடன் கடற்றொழில் மற்றும் விவசாய துறைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றது. அதன் பிரகாரம் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக பணியகம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களை இணைத்துக்கொள்ளும் முறை மற்றும் அதற்கு தேவையான வசதிகள் தொடர்பில் மக்களுக்கு தகவல்கள் வழங்கப்படும் என்பதுடன் அதுவரை அரசாங்கத்தின் உத்தியோபூர்வ அறிவிப்புகளுக்கு மாத்திரம் கவனம் செலுத்துமாறும் பணியம் தெரிவித்துள்ளது. (அ)

# ஆசனப்பட்டி சட்டங்கள் கடுமையாக்கப்படும்!



கொழும்பு, ஜூலை 31

பேருந்துகளில் ஆசனப் பட்டி அணிவது தொடர்பான விதிமுறைகளை விரைவில் கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தை பின்பற்றத் தவறும் பேருந்து சாரதிகள் உரிமங்கள் இரத்து செய்யப்படும் என்றும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.

காலி மாவட்ட போக்குவரத்துக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2,350 பேர் வீதி விபத் துக்களில் இறக்கின்றனர், சுமார் 6,000 பேர் படுகாயமடைகிறார்கள்.

அதனால்தான் போக்குவரத்து அமைச்சு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான வீதி பாதுகாப்பு திட்டத்தை கடுமையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், நாங்கள் ஆசனப்பட்டி ஒழுங்கு முறையை விதிப்போம், தொடர்புடைய வர்த்தமானியை வெளியிடுவோம்.

2011 முதல் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும், யாரும் இது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை.

மக்கள் ஆசனப்பட்டி அணியாமல் நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலையில், வருடாந்த இறப்பு எண்ணிக்கையை 2,300 லிருந்து 2,000 க்கும் குறைவாகக் குறைக்க இந்த நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன-என்றார். (அ)

# மழைக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஜூலை 31

எதிர்வரும் சில நாட்களில் வடக்கு, வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்ய சாதகமான வளிமண்டல நிலைமைகள் உருவாகி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடமத்திய, மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும்.

தென் மாகாணத்தில் அவ்வப்போது மணிக்கு 40 கி.மீ வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் ஏற்படும் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ)

# தரம் 12 உயர்தர தொழிற்கல்வி பிரிவுக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஜூலை 31

2025-2026 கல்வியாண்டிற்கான தரம் 12 உயர்தர தொழிற் கல்வி பிரிவுக்குச் சேர்வதற்கான விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இதன்படி, சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம், விண்ணப்பிக்கக்கூடிய பாடசாலைகளின் பட்டியல் மற்றும் தொழிற் கல்வித் துறைகள் உள்ளிட்ட தகவல்கள் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் சிறப்பு அறிவிப்புகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் எந்தவொரு முடிவுகளும், இந்த மாணவர் சேர்ப்பின் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, மாணவர்களுக்கு 12 ஆம் வகுப்பில் சேரவும், தரம் 13 வரை பாடசாலைக் கல்வியைத் தொடரவும், உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வித் தகுதியைப் பெறவும் வாய்ப்பளிப்பதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, 2024-2025 அல்லது கடந்த 2 ஆண்டுகளுக்குள் சாதாரண தரத் தேர்வுக்குத் தோற்றிய எந்தவொரு மாணவரும் தங்கள் பகுதியில் தொழிற்கல்வி பிரிவுள்ள பாடசாலைகளில் தரம் 12 இற்கு விண்ணப்பிக்கலாம் என்று கல்வி அமைச்சு கூறியுள்ளது.

இந்த கற்கைகளில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், வாகன தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் பராமரிப்பு சேவைகள், இரத்தினம் மற்றும் நகை தொழில்நுட்பம், அழகு கலாசாரம் உட்பட்ட பல்வேறு துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சொத்துகளை நாம் மோசடி செய்யவில்லை!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 31

அரச சொத்துக்களை நாங்கள் முறைகேடாக பயன்படுத்தவுமில்லை,மோசடி செய்யவுமில்லை. நீதிமன்ற கட்டமைப்பை அரசியல்மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நீதித்துறையின் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எமது தரப்பு நியாயத்தை குறிப்பிட்டு நீதியை பெற்றுக்கொள்வோம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு நல்லாட்சி அரசாங்கம் எடுத்த தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதி யில் இறங்கிப் போராடினோம். எம்முடன் மக்கள் விடுதலை முன்னணியினரும் அன்று வீதியில் இறங்கி போராடினார்கள்.

இந்த போராட்டத்தின் போது நாங்கள் கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றோம். அந்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகாத காரணத்தால் தான் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் என்னை கைது செய்வதற்கு திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்தது. செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தின் முன்னிலையாகி அந்த பிடியாணையை நீக்கிக் கொண்டேன்.

நீதிமன்ற கட்டமைப்பை அரசியல்மயப்படுத்த இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. எம்மை கைது செய்வதால் நடைமுறையில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காது.

போராட்டங்களினால் நாட்டை அபிவிருத்தியடைய செய்ய முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

கடந்த 75 ஆண்டு காலமாக யார் போராட்டங்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டது? மக்கள் விடுதலை முன்னணி கடந்த 75 வருட காலமாக ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்கள் முன்னெடுத்த அபிவிருத்திக்கு எதிராகவே போராடியது. அன்று போராடியது.இன்று ஏதும் தெரியாமல் தள்ளாடுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 1 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதுவரை தொழிற்றுறையை விருத்தி செய்யும் எவ்வித திட்டங்களும் செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியும்-என்றார்.

(அ)

# தகவலறியும் உரிமை குழுவுக்கு தலைவரை நியமிக்க வேண்டும்

## உயர்நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு, ஜூலை 31

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு உடனடியாக தலைவர் ஒருவரை நியமிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


அந்த மனுவில் ஜனாதிபதியின் செயலாளர், சபாநாயகர், சட்டமா அதிபர் மற்றும் அரசமைப்பு பேரவையில் பல உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர் பதவி சுமார் ஆறு மாதங்களாக வெற்றிடமாக இருப்பதாக மனு தாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தலைவராக பணியாற்றிய ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்னவின் விலகலின் பின்னர் குறித்த வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வெற்றிடம் நிலவும் குறித்த பதவிக்கு ஜனாதிபதி, புதிய தலைவரையோ அல்லது இடைக்கால தலைவரையோ நியமிக்கவில்லை. இந்த சூழ்நிலை தகவல் கோரிக்கைகள் தொடர்பான இறுதி முடிவுகளை எடுக்க முடியாத சூழ்நிலைக்கு வழிவகுத்துள்ளதாகவும் இது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகிறது என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# மாலைதீவின் அரச பிரதானிகள் ஜனாதிபதி அநுரவுடன் சந்திப்பு!



மலே, ஜூலை 31

மாலைதீவின் பிரதி சபாநாயகர் மற்றும் அரசாங்கத்தின் ஐந்து அமைச்சரவை அமைச்சர்கள் நேற்று முன் தினம் 'குரும்பா மோல்டீவ்ஸ்' விடுதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன்படி, மாலைதீவு பிரதி சபாநாயகர் அகமத் நஸீம், வெளியுறவு அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல், பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக அமைச்சர் மொஹமட் சயீத், பாதுகாப்பு அமைச்சர் மொஹமட் கசான் மௌமூன், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் மூசா சமீர், உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் அலி இ/ஹசான் ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

மாலைதீவுக்கு அரச விஜயம் மேற்கொண்டதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த அவர்கள், இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதன் 60 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் இந்தப் பயணம், எதிர்காலத்தில் ஆழமான ஒத்துழைப்பு, பரந்த புரிதல் மற்றும் சிறந்த நட்புக்கான அடித்தளமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

(அ)

# பீடிக்கான புகையிலை வரியை அதிகரிக்க நிதிக் குழு அனுமதி

கொழும்பு, ஜூலை 31

பீடிக்கு அறவிடப்படும் புகையிலை வரியை 2 ரூபாயில் இருந்து 3 ரூபாயாக உயர்த்தும் நோக்கில் 2025 ஏப்ரல் 1 முதல் அமுலுக்கு வரும் அதிவிசேட வர்த்தமானிக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ சில்வா தலைமையில் ஜூலை 22 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது 1999 ஆம் ஆண்டின் புகையிலை வரிச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கடந்த ஆண்டு 1,140 பீடி உற்பத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டும், வரி உயர்வுக்குப் பிறகு 840 மட்டுமே புதுப்பிக்கப்பட்டுள்ளன என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால் எதிர்பார்த்த வருமானம் ரூ.2 பில்லியனாக இருந்தும், ரூ.1,055 மில்லியனே வசூலாகியதாகவும், இவ்வருடம் இதுவரை ரூ.469 மில்லியன் மட்டுமே வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத பீடி கடத்தலே வருமான குறைபாட்டுக்கு காரணம் என ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். வரி உயர்வால் அனுமதிப்பத்திர புதுப்பிப்பு குறைவடைந்து, சட்டவிரோத சந்தை அதிகரித்ததா என குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

சட்டபூர்வ பீடி உற்பத்தியை ஊக்குவிக்க, வரி சீர்திருத்தங்கள் அறிவியல் ஆதாரத்தில் அமைய வேண்டும் என நிதிக் குழு தெரிவித்தது.

இந்தக் கூட்டத்தில் ரவி கருணாநாயக்க, சாணக்கியன் இராசமாணிக்கம், கௌசல்யா ஆரியரத்ன, அர்கம் இலியாஸ் மற்றும் நிமல் பலிஹேன ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அபேகுணவர்தனவின் மகள்மோசடி தடுப்பு பிரிவில் சரண்

கொழும்பு, ஜூலை 31

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் ரொஷேல் மெலனி அபேகுணவர்தன, வலான மோசடி தடுப்புப் பிரிவில் சரணடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்டதாகக் கூறப்படும் சொகுசு வாகனம் தொடர்பான வழக்கில் அவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

இந்த வழக்கில் முன்னதாக அவரது கணவரும் அண்மையில் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார்.

இந்த வழக்கில் குறித்த இருவருக்கும் மத்துகம நீதவான் நீதிமன்றினால் வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது!

கொழும்பு, ஜூலை 31

ஹோக்கம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை மாலை 5:00 மணியளவில் மாளிகாவில-மொனராகலை வீதியில் வீரகஸ் சந்திக்கு அருகில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

மணல் அகழ்வு நடவடிக்கை தொடர்பாக அதிகாரி இலஞ்சம் கேட்டதாகக் கூறி, ஹோக்கம்பிட்டி பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் படி, சட்டத் தலையீடு இல்லாமல் டிராக்டர் மூலம் மணல் கொண்டு செல்ல அனுமதிக்க அதிகாரி மாதந்தோறும் ரூ.50,000 இலஞ்சம் கேட்டுள்ளார்.

அண்மைய ஒரு சந்தர்ப்பத்தில், அவர் கட்டும் புதிய வீட்டின் வேலைக்கு மூன்று கியூப் மணல் - அல்லது ரூ.45,000 ரொக்கத்திற்கு சமமான பணம்- கேட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

பின்னர் கோரிக்கையை ரூ.40,000 ஆகக் குறைத்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பரிவர்த்தனையின்போது அவர் கைது செய்யப்பட்டு வெள்ளவாய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# உலகின் 50 சிறந்த தீவுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது இலங்கை

கொழும்பு, ஜூலை 31

உலகளாவிய சுற்றுலா வழிகாட்டி இணையத் தளமான பிக்-7 டிராவல் தொகுத்த "உலகின் 50 சிறந்த தீவுகள்" பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

அதன் மூலம் உலகின் மிக அழகான தீவு என்ற மகுடம் இலங்கைக்கு சூட்டப்பட்டுள்ளது.

பிக் 7 டிராவல் இன் படி, இலங்கை, அதன் வளமான கலாசார பாரம்பரியம், மாறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் அழகிய கடற்கரைகள் ஆகியவற்றின் கலவைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேசத்தின் தனித்துவமான வனவிலங்குகள், பழங்கால கோயில்கள், பசுமையான தேயிலைத் தோட்டங்கள் மற்றும் துடிப்பான உள்ளூர் அனுபவங்களுக்காகவும் இந்தப் பட்டியலில் இலங்கை முன்னணி இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியபாரதியின் மற்றொரு சகாவும் மட்டக்களப்பில் கைது

## மயானத்திலும் சோதனை முன்னெடுப்பு

மட்டக்களப்பு, ஜூலை 31

**இனியபாரதியின் மற்றொரு சகாவான வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலிகிருஷ்ணன் சபாபதி மட்டக்களப்பு கிரானில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.**

கொழும்பில் இருந்து வந்த குற்ற விசாரணைப் பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர். அத்துடன், இதுவரை இனியபாரதியின் 4 சகாக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதேநேரம், நேற்றுமுன்தினம் இனியபாரதியின் சகா ஒருவர் தம்பிலுவில் இந்து மயானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதைத் அங்கு சோதனைகள் இடம்பெற்றன. எனினும், இந்த சோதனை நடவடிக்கை தொடர்பில் எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

போர் காலத்தில் பிள்ளையான் தலைமையிலான குழுவினால் கடத்தப்பட்டனர் என்று சந்தேகிக்கப்படும் பலரும் இந்தப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என்றும் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று அந்த பகுதி மக்களிடையே தகவல்கள் பரவியிருந்த நிலையில் தற்போது அந்த மயானத்தில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருமலையில் 4 ஏக்கர் கஞ்சா தோட்டம் அழிப்பு



திருகோணமலை, ஜூலை 31

திருகோணமலையில் கந்தளாய் காட்டு பகுதியில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டம் விசேட அதிரடிப் படையினரால் முற்றுகையிடப்பட்டு அழிக் கப்பட்டுள்ளது.

சுமார் 4 ஏக்கர் பரப்பில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை குறித்த பகுதி முற்றுகையிடப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டது. விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமையவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும், குறித்த பகுதியில் மிகவும் நுட்பமான முறையில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்ததுடன், சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# 8 வயது மகள் வன்புணர்வு சந்தேகத்தில் தந்தை கைது

மூதூர், ஜூலை 31

8 வயது மகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அந்தச் சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாய் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே மூதூர் பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

6 நாட்களுக்கு முன்னர் முறைப்பாடு அளிக்கப்பட்டபோதும் பல தரப்பினரின் அழுத்தத்தை தொடர்ந்து நேற்று முன்தினமே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமி திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று மருத்துவமனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கல்முனை வடக்கு வழக்கு; ஜனவரிக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 31

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக் கோரிய வழக்கை அடுத்த ஆண்டு ஜனவரி 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையசரன் தாக்கல் செய்த இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, வழக்காளி தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், பிரதிவாதிகளான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச். எம். எம். ஹரீஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம். ஏ. கலீலுர் ரஹ்மான் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான சஞ்சீவ ஜெயவர்த்தன, பைசர் முஸ்தபா ஆகியோரும் முன்னிலையாகினர்.

இரு தரப்பு வாதங்களைத் தொடர்ந்து, மேலதிக வாதங்கள், சமர்ப்பிப்புகளை முன்வைப்பதற்காக வழக்கை அடுத்த ஆண்டு ஜனவரி 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# வாய்க்காலிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை, ஜூலை 31

மூதூர் சந்தையின் பின்புற வாய்க்காலில் ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மூதூர் - பாலநகரைச் சேர்ந்த 43 வயது நபர் என்று அடையாளம் காணப்பட்டது.

இவர் நேற்று அதிகாலை 2 மணியளவில் மீன்பிடிக்கச் சென்றிருந்தார் என்று கூறப்படுகிறது.

மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. சடலத்தை மீட்ட பொலிஸார் நீதிவானின் உத்தரவுக்கமைய உடற்கூராய்வு பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருடர்கள் சங்கிலி பறித்தபோது காயமடைந்த மூதாட்டி மரணம்

மட்டக்களப்பு, ஜூலை 31

திருடர்கள் சங்கிலியை அறுத்தபோது ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றுவந்த மூதாட்டி அது பலனின்றி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - ஆனைப்பந்தி - வைரவர் கோயிலடியை சேர்ந்த மகேஸ்வரி சரவணமுத்து (78 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், கடந்த 24ஆம் திகதி தனது வீட்டு வாசலை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது, மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அவரின் சங்கிலியை அறுத்துச் சென்றனர்.

இதன்போது, மூதாட்டி கழுத்தில் காயமடைந்ததுடன் மூர்ச்சையடைந்திருந்தார். மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ஐ)

# கல்முனை, இறக்காமம் பிரதேச உணவகங்களில் விசேட சோதனை

கல்முனை, ஜூலை 31

கல்முனை, இறக்காமம் பிரதேசங்களில் உணவு கையாளும் நிலையங்களில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் கடந்த திங்கட்கிழமை இந்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன், மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கையில் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ். ஜீவராஜா உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)





# நூல் அறிமுக நிகழ்வு

திருகோணமலை, ஜூலை 31

கலாநிதி என். கே. எஸ். திருச்செல்வம் எழுதிய 'இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில் தமிழர்' நூல் அறிமுக நிகழ்வு திருகோணமலையில் நடைபெற்றது.

திருகோணமலை எழுநா, திருகோணமலை தளம் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் தளம் அமைப்பின் பணிமனையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், தலைமை உரையை தளம் அமைப்பின் இயக்குநர் மருத்துவர் ஹயக்கிரிவன் ஆற்றினார். நூல் அறிமுக உரையை தென்கயிலை ஆதீனம் சுவாமி அகத்திய அடிகளார் நிகழ்த்தியிருந்தார்.

மேலும், குறித்த நூலுக்கான மதிப்பீட்டுரையை மருத்துவர் அ. சதீஸ்குமார் ஆற்றியிருந்தார். தொடர்ந்து, ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் வழங்கினார்.

"தமிழர் தொன்மையின் மீது புதிய பார்வையை வழங்கும் இவ்வாறான நூல்கள் காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. எனவே, மேலும் இவைபோன்று தொடர்ந்தும் வெளியிடப்பட வேண்டும்", என்று நிகழ்வில் பங்கேற்றோர் கருத்துரைத்திருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் மறுத்தால் பலஸ்தீன தனி அரசை அங்கீகரிப்போம்!

## இங்கிலாந்து எச்சரிக்கை



**லண்டன், ஜூலை 31**

**"காஸாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் கணிசமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் செப்ரெம்பர் மாதத்தில் இங்கிலாந்து பலஸ்தீன அரசை அங்கீகரிக்கும்", என்று அந்த நாட்டின் பிரதமர் சேர் கெய்ர் ஸ்டார்மர் கூறியுள்ளார்.**

"போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் ஒப்புக்கொள்ள வேண்டும். இரு தரப்பினரும் நீண்டகால அமைதிக்கு உறுதியளிக்க வேண்டும். ஐ. நா. வழங்கும் உதவிகளை பலஸ்தீன பகுதிக்குள் அனுமதிக்க வேண்டும். இவை நடைபெறாதுவிடின் எதிர்வரும் செப்ரெம்பரில் நடக்கும் ஐ. நா. பொதுச் சபை கூட்டத்தில் பலஸ்தீனத்தை நாடாக இங்கிலாந்து அங்கீகரிக்கும் - என்றும் மேலும் தெரிவித்தார்.

அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே இங்கிலாந்து பிரதமர் மேற்கண்ட விடயங்களை கூறினார். அத்துடன், காசாவில் நிலவும் சகிக்க முடியாத சூழ்நிலை இரு நாடுகளிலும் தீர்வுக்கான சாத்தியக்கூறு குறைந்து வருகிறது என்ற கவலை காரணமாக இந்தத் திட்டத்தை இப்போது அறிவிப்பதாகக் கூறினார்.

"பாதுகாப்பான இஸ்ரேலுடன் சாத்தியமான - இறையாண்மை கொண்ட பலஸ்தீன அரசு" என்ற இங்கிலாந்தின் இலக்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அழுத்தத்தில் உள்ளது - என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, "இந்த நடவடிக்கை ஹமாஸின் கொடூரமான பயங்கரவாதத்துக்கு வெகுமதி அளிக்கிறது", என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (ஐ)

# ரஷ்யாவில் நிலநடுக்கம் 13 அடிக்கு எழுந்த சுனாமி

## அமெரிக்கா, ஜப்பானுக்கும் சுனாமி எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 31

ரஷ்யாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து ரஷ்யா, ஜப்பான் நாடுகளை சுனாமி தாக்கியது. அத்துடன், அமெரிக்கா, ஈக்குவடோர் நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் 19.3 கிலோமீற்றர் ஆழத்தில் 8.8 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ரஷ்யாவின் குறில் தீவுகள், ஜப்பானின் வடக்கு தீவான ஹொக்கைடோவில் சுனாமி பேரலைகள் தாக்கின.

சுமார் 4 மீற்றர் (சுமார் 13 அடி) உயரம் வரையிலான சுனாமி பேரலைகள் ரஷ்யாவின் குறில் தீவு பகுதியை தாக்கியது. தொடர்ந்து ஹவாய், சிலி, ஜப்பான் மற்றும் சாலமன் தீவுகளில் சுனாமி எச்சரிக்கையை பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் விடுத்தது.


நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்பட்டதை ரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது. மக்கள் அடைக்கலம் தேடி வீதிகளில் குவிந்தனர் என்று டாஸ் தெரிவித்துள்ளது. அங்கு மின்சாரம், தொலைபேசி இணைப்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, அமெரிக்காவின் அலாஸ்காவில் உள்ள தேசிய சுனாமி எச்சரிக்கை மையமும் சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது. அலாஸ்கா, ஹவாய், கலிபோர்னியா, ஒரிகான், வாஷிங்டன் உள்ளிட்ட பகுதிகளுக்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தின் தொடக்கத்தில் 7.4 ரிக்டர் அளவில் கம்சட்கா பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த 1952இல் இந்த பகுதியில் ஏற்பட்ட 9.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது ஹவாயில் 9.1 மீற்றர் அளவுக்கு சுனாமி பேரலைகள் தாக்கின என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மனிதாபிமான பேரழிவுக்குள் காஸாவின் பலஸ்தீன மக்கள்

## ஐ. நாவின் அமைப்பு எச்சரிக்கை



உணவுக்காக காத்திருக்கும் பலஸ்தீனர்கள்

நியூயோர்க், ஜூலை 31

"காஸாவில் பஞ்சத்தின் மோசமான சூழ்நிலை தற்போது நடந்து கொண்டிருக்கிறது. இவை பட்டினி அல்லது ஊட்டச்சத்து மரணங்கள் மேலும் உயர்வதற்கான ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றன" என்று ஐ. நா. ஆதரவு பெற்ற உலக உணவு பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனிடையே, காஸா எல்லைக்குள் தொடர்ந்தும் இஸ்ரேல் உணவுப் பொருட்களை அனுப்புவதை கட்டுப்படுத்துகிறது. உண்மைகள் உள்ளன - அவை மறுக்க முடியாதவை. காஸாவிலுள்ள பலஸ்தீனர்கள் மிகப்பெரும் மனிதாபிமான பேரழிவை சந்தித்து வருகின்றனர் என்று ஐ. நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டெரெஸ் கூறியுள்ளார்.

ஒருங்கிணைந்த உணவு பாதுகாப்பு வகைப்பாடு (ஐ. பி. சி.) இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. அத்துடன், "21 இலட்சம் பலஸ்தீனர்களிடையே பரவலான பட்டினி, ஊட்டச்சத்து குறைபாடு, நோய் ஆகியவை பசி தொடர்பான இறப்புகளை அதிகரிப்பதற்கான ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றன.

காஸாவில் 30 வீதமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. பட்டினி அல்லது ஊட்டச்சத்து குறைபாட்டுடன் தொடர்புடைய வகையில் ஒருநாளில் 10 ஆயிரம் மக்களில் இருவர் அல்லது 10 ஆயிரம் குழந்தைகளில் நால்வர் இறக்கின்றனர் என்று ஐ. பி. சி. கணித்துள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் பசி தொடர்பான இறப்புகள் அதிகரித்துள்ளன. ஜூலை 17 முதல் 16 இறப்புகள் பதிவாகியுள்ளன. பேரழிவு தரும் துன்பத்தைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்றும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இதேசமயம், ஊட்டச்சத்து குறைபாட்டால் 147 பேர் உயிரிழந்தனர். இதில் 88 பேர் குழந்தைகள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# போர் நிறுத்தத்தை கம்போடியா மீறியது

## தாய்லாந்து இராணுவம் குற்றச்சாட்டு

பாங்கொக், ஜூலை 31

கம்போடியா போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளது என்று தாய்லாந்து இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. முன்னதாக, இரு நாடுகளும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு கடந்த திங்கட்கிழமை சம்மதித்திருந்தன.

எல்லை சிக்கலை தொடர்ந்து கடந்த 24ஆம் திகதி கண்ணி வெடி தாக்குதலில் 5 தாய்லாந்து இராணுவத்தினர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்த போரில் இரு தரப்பிலும் 38 பேர் உயிரிழந்தனர். 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த நிலையில், தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய், கம்போடியாவின் பிரதமர் ஹன் மானெட் ஆகியோர் நேற்றுமுன்தினம் மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன்வரின் அதிகாரபூர்வ இல்லத்தில் போர் நிறுத்தப் பேச்சில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

இந்த நிலையில், கம்போடியா போர் நிறுத்தத்தை மீறிவிட்டதாக தாய்லாந்து இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. தாய்லாந்து எல்லைக்குள் கம்போடிய படைகள் தாக்குதலில் ஈடுபட்டன என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேசமயம், "நள்ளிரவு 12 மணிக்கு போர் நிறுத்தம் ஏற்பட்டதிலிருந்து எங்கள் படைகள் தாக்குதல்களை நிறுத்தின" என்று கம்போடிய பிரதமர் ஹன் மானெட் தெரிவித்துள்ளார். (ஐ)

# அணு ஆயுத மிரட்டல் இனி வேலை செய்யாது

## ஒப்ரேஷன் சிந்தூர் நிரூபித்ததாக இந்திய பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, ஜூலை 31

"ஒப்ரேஷன் சிந்தூர் மூலம் அணு ஆயுத மிரட்டல் இனி வேலை செய்யாது என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. அத்துடன், பாகிஸ்தானின் பல விமான படைத் தளங்கள் இப்போது வரை அவசர சிகிச்சை பிரிவில் உள்ளன" என்று இந்திய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஏப்ரல் 22ஆம் திகதி பஹல்காமில் நடந்தது கொடுமையின் உச்சம். அப்பாவி மக்களிடம் அவர்களின் மதம் என்ன என்று கேட்டு பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றார்கள். இது இந்தியாவை, வன்முறை எனும் நெருப்பில் தள்ளுவதற்கான திட்டமிட்ட சதி. இது இந்தியாவில் கலவரங்களை ஏற்படுத்துவதற்கான திட்டமிட்ட சதி. இந்த சதியை நாடு ஒற்றுமையுடன் முறியடித்ததற்காக நாட்டு மக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இராணுவம் சுதந்திரமாக செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. எங்கே, எப்போது, எப்படி, எந்த முறையில் தாக்குதலை நடத்துவது என்பதை இராணுவம் முடிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. அனைத்தும் தெளிவாகக் கூறப்பட்டன. பயங்கரவாதிகள் தண்டிக்கப்பட்டதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மூளையாக இருந்தவர்கள் இன்றுவரை தூக்கமில்லாத இரவுகளைக் கழிக்கும் அளவுக்கு எங்கள் தண்டனை இருந்தது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியா ஒரு பெரிய நடவடிக்கையை எடுக்கும் என்ற எண்ணம் பாகிஸ்தான் படைகளுக்கு இருந்தது. அவர்கள் அணு ஆயுத அச்சுறுத்தல்களை தொடங்கினர். மே 6-7 ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட இரவில் திட்டமிட்டபடி நமது இராணுவம் தாக்குதலை நடத்தியது. பாகிஸ்தானால் எதுவும் செய்ய முடியவில்லை. நமது ஆயுதப் படைகள் 22 நிமிடங்களுக்குள் துல்லிய தாக்குதல்களை நடத்தி பழிதீர்த்தன. அணு ஆயுத மிரட்டல் இனி வேலை செய்யாது என்பதை இந்தியா நிரூபித்துள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# இந்தியா - இங்லாந்து டெஸ்ட் இறுதி போட்டி இன்று ஆரம்பம்!

லண்டன், ஜூலை 31

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. லண்டன் ஒவல் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில், 4 போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இதில், இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்தநிலையில், இன்றைய தினம் ஆரம்பமாகும் போட்டி இந்தியாவுக்கு மிகமுக்கியமானதாக அமைந்துள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரை சமன் செய்ய முடியும் என்ற கட்டாயத்தில் இந்திய அணி களமிறங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மகளிர் ஒருநாள் தரவரிசை; ஸ்கைவர் பிராண்ட் முதலிடம்



டுபாய், ஜூலை 31

இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி ஸ்கைவர் பிராண்ட் ஐ. சி. சியின் ஒருநாள் தரவரிசையில் முதலிடத்தை பிடித்துள்ளார். இந்தியாவின் ஸ்மிருதி மந்தனாவை பின்னுக்குத் தள்ளி அவர் இந்த இடத்தைப் பிடித்துள்ளார்.

ஐ. சி. சி. தரவரிசையில், ஸ்கைவர் பிரண்ட் கடைசியாக 2023ஆம் ஆண்டு முதலிடம் வகித்திருந்தார். சமீபத்தில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டி தொடரில் 32 வயதான ஸ்கைவர் பிரண்ட் 160 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இதன் மூலம் 731 புள்ளிகளுடன் அவர், முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஸ்மிருதி மந்தனா 728 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இந்திய அணியின் தலைவி ஹர்மன்பிரீத் கவுர் 21ஆவது இடத்தில் இருந்து 11ஆவது இடத்துக்கும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 15ஆவது இடத்தில் இருந்து 13-வது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.

பந்துவீச்சு தரவரிசையில் இந்தியாவின் தீப்தி சர்மா 4ஆவது இடத்தில் தொடர்கிறார். இங்கிலாந்தின் சோஃபி எக்லெஸ்டோன், அவுஸ்திரேலியாவின் ஆஷ் கார்ட்னர், மேகன் ஸ்கட் ஆகியோர் முறையே 1 முதல் 3ஆவது இடங்களில் உள்ளனர்.

# தென்னாபிரிக்காவுடனான தொடர் ஆஸி அணியின் தலைவராக மார்ஷ்

கன்பெரா, ஜூலை 31

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான இருபது- 20, ஒருநாள் தொடர்களுக்கு தலைவராக மிற்செல் மார்ஷை அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா வுக்கு சென்ற 3 இரு பது -20, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

ஒகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பமாகும் தொடர்களில் முதலில் இருபது - 20 தொடர் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இரு தொடர்களுக்குமான அணிகளை அவுஸ் திரேலியா அறிவித்துள்ளது.

இரு தொடர்களுக்குமான அணித் தலைவராக மிற் செல் மார்ஷ் தலைவ ராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்:

இருபது - 20 - மிற்செல் மார்ஷ் (தலைவர்), சீன் அப்போட், ரிம் டேவிட், பென் துவார்ஷியஸ், நதன் எல்லீஸ், கமரூன் கிறீன், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், மேட் குன்னமென், கிளென் மக்ஸ்வெல், மிற்செல் ஓவன், மத்தியூ ஷோர்ட், அடம் ஷம்பா.




ஒருநாள் அணி - மிற்செல் மார்ஷ் (தலைவர்), சேவியர் பார்ட்லெட், அலெக்ஸ் கேரி, பென் துவார்ஷியஸ், நதன் எல்லீஸ், கமரூன் கிறீன், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், மார்னஸ் லபுஸ்சாக்னே, லான்ஸ் மோரிஸ், மிற்செல் ஒவன், மத்தியூ ஷோர்ட், அடம் ஷம்பா.

# ஆடுகள பராமரிப்பாளருடன் வாக்குவாதம் செய்த கம்பீர்!

லண்டன், ஜூலை 31

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் கௌதம் கம்பீருக்கும் ஓவல் மைதானத்தின் ஆடுகள பராமரிப்பாளர் லீ ஃபோர்டிஸுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இந்தநிலையில், நேற்றைய தினம் இந்திய அணி ஓவல் மைதானத்தில் வலைப்பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது, அவர்கள் ஆடுகளத்தை பார்வையிட்டனர்.

அவர்களின் இந்த செயலுக்கு ஓவல் மைதான ஆடுகள பராமரிப்பாளர் எதிர்ப்பு தெரிவித்தார். இதைத் தொடர்ந்து கம்பீர் அவரிடம் கோபத்தை வெளிப்படுத்தினார். இதைத் தொடர்ந்து இருவரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். (ஐ)



# கனடா ஓபின் ரென்னிஸ் ரைபகினா முன்னேற்றம்!

ரொறன்ரோ, ஜூலை 31

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனை ரைபகினா 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரொறன்ரோவில் நடக்கிறது.

இந்த தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா (கஜகஸ்தான்), அமெரிக்காவின் ஹெய்லி பாப்டிஸ்ட் உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ரைபகினா 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் ஹெய்லி பாப்டிஸ்ட்டை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)



# கனடா ஓபின் ரென்னிஸ் மெத்வதேவ் 3ஆவது சுற்றில்




ரொறன்ரோ, ஜூலை 31

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரரான ரஷ்யாவின் டானியல் மெத்வதேவ் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரொறன்ரோவில் நடக்கிறது.

இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான டானியல் மெத்வதேவ் (ரஷ்யா), செக் குடியரசின் டாலிபோர் ஸ்வ்ர்சினா உடன் மோதினார்.

இந்த போட்டியில் ஆதிக்கம் செலுத்திய டானியல் மெத்வதேவ் 7-6 (7-3), 6-3 என்ற செற் கணக்கில் டாலிபோர் ஸ்வ்ர்சினாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையுடைய...

எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், 102 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சாட்சியம்...

எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா, தனது கட்சிக்காரர் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கத் தயாராக இருக்கிறார் என்று அறிவித்தார். எனினும், பாதுகாப்பு காரணங்களால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எனது கட்சிக்காரர் முற்படுவது சிக்கல். கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறார் - என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து நீதியரசர்களின் அமர்வு, இந்தக் கோரிக்கையை இன்றிலிருந்து (நேற்று முதல்) 4 வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் றத்தில் சமர்ப்பித்து பொருத்தமான உத்தரவைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணி றொமேஷ் டி சில்வாவுக்கு அறிவித்தது.

மேலும், தனது கட்சிக்காரர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க தயாராக இருப்பதால் மனுவின் விசாரணையை நிறைவுறுத்துமாறு கோட்டாபயவின் சட்டத்தரணி நீதிமன்றத்தை கோரினார்.

இதற்கு, வழக்காளிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நுவான் போபகேயும் இணக்கம் தெரிவித்தார். இதன்படி, மேன்முறையீட்டு மனுவின் விசாரணையை நிறைவுறுத்த நீதிமன்றம் முடிவு செய்தது.

கடந்த 2011 டிசெம்பர் 9ஆம் திகதி லலித், குகன் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பில் ஆட்கொணர்வு மனுவை அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். இந்த வழக்கில் அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை சாட்சியமளிக்க கடந்த 2019 செப்ரெம்பர் 27ஆம் திகதி நீதிமன்றில் முற்படுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாதுகாப்பு காரணங்களை காட்டி அவர் நீதிமன்றம் செல்ல முடியாது என்று கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அத்துடன், நீதிமன்றின் உத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கலும் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் விடுத்த உத்தரவை இரத்துச் செய்தது.

இதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகனின் உறவினர்கள் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

லலித், குகன் ஆகியோர் முன்னிலை சோசலிஷ கட்சியின் உறுப்பினர்களாவர். இவர்கள் இருவரும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் - அவர்களுக்கு நடந்தவை தொடர்பில் தீவிர ஆர்வம் காட்டி செயல்பட்டிருந்தனர். இவர்கள் இருவரும் 2011 டிசெம்பர் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் தொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், சந்திப்புக்கு முதல் நாளில் இருவரும் காணாமல் போயிருந்தனர். இவர்கள் நீர்வேலி பகுதியில் வைத்து குழு ஒன்றால் கடத்தப்பட்டனர் என்று கூறப்பட்டது. லலித் ஜே. வி. பியின் முழுநேர அரசியல் செயல் பாட்டாளராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 22பேரின்...

செய்யப்பட்டது.

எனினும், சம்பவம் நடைபெற்ற இடம் சாவகச்சேரி நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் இருந்ததால், அந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு, வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று புதன்கிழமை வழங்கப்படவிருந்தது. எனினும், நீதிவான் விடுமுறையில் இருந்தமையால் இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 20ஆயிரம்...

தொடர்பில் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்று குருநாகலில் நடைபெற்றது. இதில், கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாளாந்தம் பாடசாலை நேரத்தில் 50 வீத மாணவர்களே வகுப்பறையில் இருக்கின்றனர். அடுத்த வருடத்தில் தரம் ஒன்றுக்கும் தரம் 6இற்கும் புதிய பாட விதானங்களை அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் புதிய இலக்களை அறிமுகப்படுத்த எதிர் பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## அகழ்வுப்...

இந்தக் கூட்டத்தில் தொல்பொருள் திணைக்களம், தடயவியல் பிரிவினர், சட்ட வைத்திய அதிகாரி, புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், குற்றவியல் பிரிவினர், தேசிய நிலக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர், பொலிஸ் திணைக்களம் என்பனவற்றின் அலுவலர்கள் நீதிவான் திருமதி தஸ்னீம் பௌசான் தலைமையில் ஒன்றுகூடி ஆராய்வது என்றும், அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைய இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய தரப்பினருக்கான அழைப்பை சம்பூர் பொலிஸார் அனுப்ப வேண்டும் எனவும் நீதிவான் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 25 ஆம் திகதி மூதூர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய நேற்றைய தினம் சட்ட மருத்துவ அதிகாரி மன்றுக்கு அறிக்கையை முன்வைத்தார்.

அந்த அறிக்கையில், கண்டெடுக்கப்பட்ட எலும்பு எச்சங்கள் மிகவும் பழமையானது - என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தினர் முன்வைத்த அறிக்கையின்படி அவ்விடத்தில், முன்னர் மயானம் ஏதாவது இருந்துள்ளதா என்பதைத் துல்லியமாகக் கூற முடியாதுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

இதனால், தீர்மானம் ஒன்றை எடுப்பதாயின் அகழ்வுடன் தொடர்புடைய சகல தரப்புகளுடனும் இணைந்து கலந்துரையாட வேண்டிய நிலை உள்ளது. எனவே, அதற்கான நடவடிக்கை எடுப்பது என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

கடந்த 19 ஆம் திகதி சம்பூரில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் அகழ்வில் ஈடுபட்டபோது மனித மண்டையோடு மற்றும் எலும்பு எச்சங்கள் வெளிப்பட்டன. இதனையடுத்து அகழ்வு பணிகள் மூதூர் நீதிமன்ற உத்தரவின்படி இடைநிறுத்தப்பட்டன. கடந்த 25ஆம் திகதி மனித எலும்பு எச்சம் மீட்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்ட நீதிவான் அகழ்வை இடைநிறுத்த உத்தரவிட்டிருந்தார். அத்துடன் சட்ட மருத்துவ அதிகாரி, தொல்பொருள் பிரிவினர் அகழ்வைத் தொடர்வதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றத்துக்கு அறிக்கை தர வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தார். (ஐ)

## போதைப்...

கிலோ ஐஸ், 11 இலட்சத்து 92 ஆயிரத்து 823 கிலோ கஞ்சா, 27 ஆயிரத்து 836 கிலோ கொக்கைன் மற்றும் 3 இலட்சத்து 81 ஆயிரத்து 428 கிலோ ஹஷிஷ் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அந்த அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் போதைப்பொருள் ஒழிப்புக்காக விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, 25 ஆயிரத்து 111 பேர் சோதனை செய்யப்பட்டனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் சோதனையிடப்பட்டன. இதில், போதைப் பொருள் குற்றங்களுக்காக 948 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், இந்த நடவடிக்கையின் போது 3 சட்டவிரோத துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பயிரிடப்படாத...

வருடங்களாக ஒரு சதவீதமாக இருந்து வந்த ஏற்றுமதி வருமான வளர்ச்சி தற்போது 7 சதவீதமாக அதிகரித்துள்ளது. நாட்டின் வரலாற்றில் மிக உயர்ந்த ஏற்றுமதி வருமானம் இந்த ஆண்டு எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

மேலும், விவசாய உற்பத்தி மேற்கொள்ளப்படாத நிலங்கள் பற்றிய தகவல்களை திரட்டி தேசிய நில வங்கி நிறுவப்படும். பின்னர், அந்த நிலங்கள் தொடர்பில் மாவட்ட செயலாளர்களுக்கு தகவல்களை வழங்கி, அவர்கள் ஊடாக அடுத்த கட்டச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மேற்படி நிலங்கள் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கப்படும். பயிரிடப்படாத நிலங்கள் ஏற்றுமதி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## இந்தியாவுடன்...

மனுவில், ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உட்பட 27 நபர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி கனிஷ்க விதாரன ஊடாக தாக்கல் செய்யப்பட்ட மனுவின் ஊடாக மனுதாரர் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு டிஜிற்றல் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பான திட்டம் தொடர்பாக இந்தியாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இலங்கையர்களின் உயிரியல் தரவை இந்தியா அணுக அனுமதிக்கும். இதன் மூலம் இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இது, இலங்கையின் இறையாண்மை, தேசிய பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தில் வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று தலையிட வாய்ப்பளிக்கும். இது அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்று கூறப்பட்டது.

மேலும், இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம், தொடர்புடைய அமைச்சரவை முடிவுகளை செல்லுபடியற்றதாக்கும் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். இந்த அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்துவதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும்- என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## பாம்பு...

சென்றிருந்தார். அவர் வீடு திரும்பாத நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் மகனைத் தேடி தாயார் சென்றுள்ளார்.

வீட்டுக்கு வரும் ஒழுங்கையில் மகன் விழுந்த நிலையில் கிடப்பதைக் கண்டார். இதையடுத்து, உறவினர்கள் இளைஞரை அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இளைஞர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

சடலம் உடல்கூராய்வுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இதன்போது, அவர் பாம்பு தீண்டி உயிரிழந்தார் என்று உடற்கூராய்வு பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

## இலங்கைக்கு...

எல்லா சரக்கு கப்பல் கடந்த மே 25 ஆம் திகதி தீப்பற்றி விபத்துக்கு உள்ளானது.

இதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத் தின் தீவு பகுதிகளிலும் கற்பிட்டி போன்ற கடற்பகுதிகளிலும் நாளாந்தம் பிளாஸ்ரிக் கழிவுகள் கரையொதுங்கின.

இந்நிலையில் எல்லா த்ரீ கப்பல் நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் கடல் சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் சந்தித்து கலந்துரையாடினர் என்று அதன் தலைவர் சமந்த குணசேகர தெரிவித்தார்.

கப்பல் விபத்தால் நாட்டின் கடல் பிராந்தியங்களுக்கு ஏற்பட்ட சேதம் மதிப்பிடப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தில் கடல்சார் சூழல் பாதிப்புகளுக்காக 100 கோடி டொலரை இழப்பீடாக வழங்க உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பௌத்த...

மேலும், "வலி. தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள கந்தரோடையில் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான இடத்தை தென்னிலங்கை மக்கள் தொடர்ச்சியாக பார்வையிட வருகின்றனர். இந்த நிலையில், அந்தப் பகுதியில் பிக்கு ஒருவர் காணி ஒன்றை கொள்வனவு செய்து பௌத்த மத்திய நிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதற்காக மக்களிடமிருந்து நிதி வசூலிக்கும் நோக்கில் அந்த இடத்தில் அறிவிப்பு பலகை ஒன்றையும் வைத்துள்ளார்.

"அங்கு அமைக்கப்படும் சட்டவிரோத கட்டடத்துக்கு எதிராக முதல் கட்டமாக எச்சரிக்கை அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. கட்டட நிர்மாணத்தை நிறுத்துமாறு என்னால் அங்கு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. அங்கு வரும் மக்களுக்கு தமிழ் பௌத்தம், சைவ மதம் இருந்தமைக்கான வரலாறு களை மறைத்து கருத்துகள் பரப்பப்படுகின்றன. இது தவறான செயல். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"அந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான பகுதிகளில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அகழ்வாராய்ச்சி செய்கிறது. அருகில் இருக்கும் காணிகளில் இந்த அகழ்வாராய்ச்சி முன்னெடுக்கப்படுகிறது. இந்த ஆய்வில், 3 அடி உயரமான கிருஷ்ணர் சிலை ஒன்று கிடைத்துள்ளது. அதனை மூடிமறைத்து அந்தப் பகுதியில் ஆய்வை மேற்கொள்ளாமல் வேறு இடங்களில் மேற்கொள்கின்றனர் என்று அண்மையில் அறிந்தேன். இது பௌத்தமயமாக்கல் திட்டம்.

தையிட்டி போன்று கந்தரோடையிலும் பௌத்த மயமாக்கலை செய்வதற்கு அரசாங்கம் நினைக்கிறது. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடவும் நாம் தயாராக உள்ளோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கடமையை மட்டுமே செய்தேன் குற்றம் எதுவும் செய்யவில்லை!

## கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி



ஒட்டாவா, ஜூலை 31

பயங்கரவாதக் குழு உறுப்பினரென கூறப்படும் ஒருவரின் குடியேற்ற விண்ணப்பத்தை ஆதரித்து கடிதங்கள் எழுதியபோது, தாம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே தமது கடமையைச் செய்ததாக, கனடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

முன்னதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரின் கனேடிய குடியுரிமை தொடர்பில் குடிவரவு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தார் என்று ஹரி ஆனந்தசங்கரி மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் அதனை ஏற்றுக்கொள்ளாத கனேடிய பிரதமரும் ஆனந்தசங்கரி மீதான குற்றச்சாட்டை நிராகரித்திருந்தார்.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதல் முறையாக பதிலளித்த ஹரி ஆனந்தசங்கரி, தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரின் முக்கிய பொறுப்புகளில் ஒன்று, உதவி கோருவோருக்கு சேவைகளை வழங்குவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி குற்றம் சுமத்தப்பட்ட விடயத்தில், தாம் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக தமது கடமைகளை செய்ததாக கனேடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (அ)

## கடற்கரையில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு இனி அபராதம்

கொழும்பு, ஜூலை 31

நாட்டின் கடற்கரையோரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு ஆண்டுதோறும் அபராதம் விதிக்க சட்டவிதிகள் கொண்டுவரப்படும் என கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோரவள முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்காக ஆண்டுதோறும் அனுமதிப்பத் திரமொன்றையும் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அதன் பணிப்பாளர் நாயகம் டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

கடற்கரையைச் சுற்றியுள்ள பாதுகாக்கப்பட்ட வலயத்தில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை தகர்ப்பதன் மூலம், கடலோர பகுதிக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கி லேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (அ)

# புதிய அரசமைப்பை கொண்டு வருவதற்கு அநுர அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, ஜூலை 31

இந்த அரசாங்கமானது புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு முயற்சிகளை முன்னெடுத்து இருப்பதாக தோன்றவில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தமிழ் மக்களுடைய தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் எங்களுக்கான நீண்ட அரசியல் கொள்கைகளை கொண்ட சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பது எங்களுக்குரியது.

குறிப்பாக காணி, பொலிஸ் மற்றும் நிதி அதிகாரங்களைக் கொண்ட அதிகாரப் பகிர்வு வேண்டும். தமிழ் மக்களே தங்களையே தாங்கள் ஆளக்கூடிய சுய ஆட்சி அமைய வேண்டும்.

அந்த வகையிலான ஆட்சி முறைக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அரசாங்கத்தோடு நாட்டுக்குள் இந்த அழகு முறையை கொண்டு வருவதற்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.ஆனால் இந்த அரசாங்கத்துக் குள் இன்னும் ஒரு ஆட்சி அதிகா ரத்தை பகிர்ந்து கொள்ளக் கூடிய அல்லது இங்குள்ள இனங்களை ஒன்றிணைக்கின்ற எண்ணங்கள் இன்னும் உருவாகவில்லை-என்றார்.

# வீதியில் வாகனங்களை மோதித்தள்ளிய லொறி!

## இருவர் ஸ்தலத்தில் பலி

கொழும்பு, ஜூலை 31

ரம்புக்கனை-ஹதரலியத்த பிரதான வீதியில் வெலிக்கடபொல பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில், ஓர் லொறி, வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு லொறி மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியது.

குறித்த விபத்தில் இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும் சிலர் காயமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்திய மீனவர் கைது வேதனையளிக்கிறது!

## மு.க.ஸ்டாலின் ஜெய்சங்கருக்கு கடிதம்

சென்னை, ஜூலை 31

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கை பாதுகாப்பு தரப்பினரால் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்படுவது வேதனை அளிப்பதாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க தூதரக ரீதியான நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் 14 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்தே தமிழக முதல்வர் இந்த கடிதத்தை எழுதியுள்ளார். (அ)

## அரியாலை மனித புதைகுழியை பார்வையிட்டார் சுவிஸ் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் அரியாலை புதைகுழியை நேற்றுமுன் தினம் நேரில் பார்வையிட்டார்.

செம்மணி மனிதப் புதைகுழியை இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறிவோல்ட் மற்றும் சுவிஸ் தூதரக அரசியல் பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் பார்வையிட்டனர்.

சுமார் 45 நிமிடங்கள் வரை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை அவர்கள் பார்வையிட்டதோடு, அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிபுணர்களுடன் கலந்துரையாடினர். (அ)

# பெருந்தொகை பீடி இலைகளை இலங்கைக்குக் கடத்த முயற்சி!

## தமிழகத்தில் ஒருவர் கைது



சென்னை, ஜூலை 31

இராமநாதபுரம் மாவட்டம் வெள்ளரி ஓடை கடற்கரையில் இருந்து, இலங்கைக்கு கடத்துவதற்காக லொறியில் கொண்டுவரப்பட்ட 2,250 கிலோகிராம் பீடி இலைப் பொதிகள் கியூ பிரிவுப் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று அதிகாலை, இராமநாதபுரம் அருகே கடல் வழியாக பீடி இலை பொதிகள் சட்டவிரோதமாக கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கியூ பிரிவு பொலிஸார் திடீர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது, ஒரு லொறியில் இருந்து பீடி இலைகளை படகில் ஏற்றிக்கொண்டிருந்த இருவர், 10 மூடைகள் எடுத்துக் கொண்டு கடல் வழியாக தப்பினர்.

இச் சம்பவத்தில் பீடி இலை ஏற்றிக்கொண்டு வந்த லொறியை பொலிஸார் பறிமுதல் செய்ததுடன், சந்தேகத்தின் பேரில் வெள்ளரி ஓடை பகுதியைச் சேர்ந்த பால கிருஷ்ணன் என்பவரை கைது செய்து, அவரை இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், கடல் வழியாக தப்பிச் சென்ற இருவரை கண்டறிந்து பிடிக்கக்கூடிய வகையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இலங்கைக்கு மிக அருகிலுள்ள காரணத்தால், இப்பகுதியில் இருந்து பல்வேறு பொருட்கள் சட்டவிரோதமாக கடத்தப்படுவது தொடர்ந்து பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு மெனேஜ்மென்ட் லிமிடெட் நிறுவனத்தினரால் 31.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org